(8) அறிக்கை அளித்தல்

விவசாய திட்ட வளர்ச்சி குழு அமைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையைத் தர இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களை அறிக்கையை அளிக்க அழைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 106-ன்படி கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

" நலிவுற்ற விவசாயப் பொருளாதாரத்தை சீர் செய்து முன்னேற்றத்திற்குக் கொண்டுவர, மாநில அளவில் தனி விவசாயத் திட்ட வளர்ச்சிக் குழு நிறுவப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தது. விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண பல்வேறு விவசாயச் சங்க உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து அரசுடன் பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் நடத்திய விவசாயச் சங்கப் பிரதிநிதிகளாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்கும் வகையிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்ட விவசாயக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இக்குழுவிற்கு முன்னாள் சட்டப் பேரவைத் தலைவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக விவசாயச் சங்கச் செயலாளருமான திரு முனு ஆதி, தலைவராக நியமிக்கப் படுகிறார். காபினெட் அந்தஸ்து தவிர மற்ற அனைத்து உரிமைகளையும் கொண்ட அமைச்சர் நிலை தலைவருக்கு வழங்கப்படும்.

கீழே குறிப்பிட்டுள்ள விவசாயச் சங்கப் பிரதிநிதிகளும், விவசாயத் தொழிலில் ஈடுபட்டவர்களின் சங்கங்கள் வேறு இருப்பின் அந்த அமைப்புகளின் பிரதிநிதிகளும், அந்தந்த அமைப்புகளின் பரிந்துரைகளின் படி இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள்.

1. தமிழக விவசாயிகள் சங்கம்.

2. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் (இந்திய கம்யூனிஸ்டு கட்சி.)

3. தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், (இந்திய கம்யூனிஸ்டு கட்சி—மார்க்சிஸ்டு).

1981 மார்ச் 4] [திரு. ச. இராமச்சந்திரன்

4. தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கம்.

5. கரும்பு விவசாயிகள் சங்கம்.

6. தமிழக விவசாயிகள் சங்கம். (திரு. பாலசுப்பிரமணியம் தலைமை).

7. தேசிய உழவர் சங்கம்.

8. விவசாயத் தொழிலாளர் சங்கம்.

இந்தக் குழுவில் தலைவர் நீங்கலாக, மொத்தம் பதினான்கு உறுப்பினர்களுக்கு மேற்படாமல் இருப்பர். குழுவின் உறுப்பினர்கள் விவசாயிகளின் பிரச்சினைகளை நேரில் கண்டறிய மாநிலம் முழுவதும் பயணம் செய்ய உரிமை உண்டு. பயணப்படி, தினப்படி பெறும் பொருட்டு இக்குழு முதல்தர குழுவாகக் கருதப் படும்.

விவசாயிகளின், குறிப்பாகச் சிறு விவசாயிகளின் கீழ்க்கண்ட பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கவும் அரசுக்குப் பரிந்துரைகள் செய்யவும் இந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது—

1. கடன்கள்.

2. வட்டி விகிதம்.

3. உதவி.

4. விவசாயத் தொழில் முன்னேற்றம்.

5. விவசாயிகளின் கால்நடைப் பாதுகாப்பு.

6. தொழில் செய்யும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு நிவாரணம்.

7. பயிர் பாதுகாப்பு.

8. இடுபொருள்கள், விளைபொருள்கள் ஆகியவற்றின் விலைகள்.

9. மின்காரம்.

10. வரிவசூல்.

1981 மார்ச் 4]

உடனடியாக எழும் உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு அரசு அதிகாரிகளுடன் கலந்து பேசித்தீர்வு காண வழிவகைசெய்யும் பொருட்டு விவசாய சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட மாவட்டக் குழுக்கள் அமைக்க இந்த உயர் மட்டக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

தமிழக அரசின் விவசாயத் துறை செயலர் இக்குழுவின் உறுப்பினர்–செயலராகப் பணியாற்றுவார்.

தமிழக அரசின் இந்த முடிவை விவசாயப் பெருமக்களும், சட்டப் பேரவை உறுப்பினர்களும் வரவேற்றுப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

தமிழ்நாட்டில் வறட்சி நிலை விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி' என்று சொல்வது உண்டு. இன்று தொடர்ச்சியாக வான் பொய்த்ததன் காரணமாக காவிரியும் பொய்த்து தமிழகம் எங்கும் வறட்சி சூழ்நிலையை ஏற்படுத்தி இருப்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம். இதனால் குடிதண்ணீர்ப் பிரச்னை மிகப் பெரிய பிரச்னையாகி விட்டது. நீர் நிலைகளில், ஏரி குளங்களில் தண்ணீர் இல்லை. அதனால் இன்றைக்குத் தமிழக அரசு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகத் தமிழகத்தில் ஏற்கனவே இருக்கிற அத்தனை கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிதாகக் கிணறுகளைத் தோண்டவும், குழாய்கள் அமைக்கவும் பல புதிய திட்டங்களைத் தீட்டி மக்களுக்குக் குடிநீர் கிடைக்கச் செய்ய பாடுபடுவதை நான் உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[இரவு 7–10.]

எனது மாவட்டமான பெரியார் மாவட்டத்தில் பல பகுதிகள் வறட்சியால் வாட்டமுற்ற நிலையில் இருக்கின்றன. தாராபுரம், வெள்ளக்கோவில், பெருந்துறை போன்ற பகுதிகளில் வறட்சி நிலை நிலவி வருகிறது. குறிப்பாக பெருந்துறை தொகுதியை எடுத்துக்கொண்டால் அது ஏற்கனவே வரண்ட பிரதேசமாக இருந்து கொண்டு வருகிறது. அந்தப் பகுதியில் பாசன வசதியைப் பெருக்கி அந்தப் பகுதி மக்களின் குறைகளைப் போக்க இந்த அரசு திட்டமிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியான மொடக்குறிச்சியில் காளிங்கராயன், கீழ்பவானி போன்ற பாசன வசதிகள் இருப்பினும் அந்தப்பகுதியில் குடிநீர்ப் பிரச்னை மிகப் பெரும் பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. இன்று அங்கு குடிநீர்ப் பிரச்னை மிகப்